## வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## காயல்பட்டணம்

## வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி 18.03.2019

காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 18.03.19 திங்கள்கிழமை 11 மணியளவில் மாணவர் பேரவை தேர்தல் விழிப்புணர்வு சங்கம், மாவட்ட நிர்வாகம் இணைந்து நடத்திய வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி, கல்லூரி நிறுவன தலைவர் அல்ஹாஜ் வாவு S. செய்யிது அப்துர் ரஹ்மான் தலைமையில் நடைபெற்றது. இரண்டாமாண்டு வணிகவியல் மாணவி M.A.A. முஷ்ஷிர்ர.்பா சுல்தானா கிராத் ஓதினார். கல்லூரி ஹாஜி ஹாபிஸ் வாவு S.A.R. அஹமது இஸ்ஹாக் M.A., Azhari (Egypt) முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி R.C. வாசுகி M.A., Ph.D., DGT வரவேற்புரை வழங்கினார்.

வாக்களிக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வண்ணக்கோலம், சுவரொட்டி வாசகங்கள், பதாகை வாசகங்கள், பேச்சுப்போட்டி ஆகிய விழிப்புணர்வு நிகழ்வுகள் போட்டிகளாக நடைபெற்றன. கையெழுத்து பிரச்சாரமும் இடம் பெற்றது. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு திருச்செந்தூர், வட்டார வருவாய்த்துறை கோட்டாட்சியர் செல்வி தனப்பிரியா பரிசு வழங்கினார்.

திருச்செந்தூர், வட்டார வருவாய்த்துறை கோட்டாட்சியர் செல்வி. தனப்பிரியா மற்றும் திருச்செந்தூர், வட்டாட்சியர் திரு. தில்லைப்பாண்டியன் ஆகியோர் வாக்களிக்கும் உரிமையுடைய ஒவ்வொருவரும் கண்டிப்பாக வாக்களிக்க வேண்டும் என்றும் 100% வாக்குப்பதிவு அனைவரின் ஒத்துழைப்பால்தான் கிடைக்கும் என்றும் சிறப்புரை வழங்கினார். வட்டார வருவாய்த்துறை கோட்டாட்சியர், மாணவியரை வாக்காளர் உறுதிமொழி ஏற்கச்செய்தார். வாக்களிக்கும் தகுதியுடைய மாணவியர்களும் கல்லூரி உதவிப் பேராசிரியர்களும் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

மாணவியர்க்கு வாக்களிக்கும் முறை குறித்த செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. தமிழ்த்துறை தலைவர் முனைவர் R. அருணாஜோதி M.A., M.Phil., Ph.D. நன்றியுரை வழங்கினார். மூன்றாமாண்டு கணிதவியல் துறை மாணவி P.Z.A. ஜெய்னம்பு ஜீஹைரா துஆ ஒத, நாட்டுப்பண்ணுடன் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்வுகள் இனிதே நிறைவடைந்தது.